# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No.70/2023 நாள்.17.2.2026

### PW1- திரு.கணேசன் , த/பெ. திரு.பக்கிரிசாமி

1, 2 ஆம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் என் மனைவி கலைசெல்வி சார்பாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேனே நான்தான் தாவா சொத்தை மனைவி பெயரில் வாங்கிவைத்தேனா என்றால் இல்லை என் மாமனார் நீதிமன்றத்திலிருந்து வாங்கி மகளுக்கு பாகம் கொடுத்தார். வா.சா.ஆ.1,2,3,4 ஆவணங்கள் எல்லாம் குடும்பத்திற்குள் தாக்கல் செய்யபட்ட வழக்கில் ஏற்பட்டவை என்றால் ஆமாம். எங்கள் குடும்பத்திற்குள் ஏற்பட்ட சொத்துக்களை பொறுத்து பிரதிவாதிகளுக்கு எந்த சம்மபந்தமும் இல்லை என்றால் ஆமாம். எனது மாமனார் சொத்து வாங்கும்போது வருவாய்த்துறை ஆவணங்களை பார்த்தாரா என்றால் எனக்கு 1993இல் திருமணம் ஆனது அதற்கு முன்பே அவர் இறந்துவிட்டார் அதனால் எனக்கு தெரியாது. நான் எப்போது வருவாய்த்துறை ஆவணங்களை பார்த்தேன் என்றால் 2011 பாகபிரிவினைக்கு பிறகு பார்த்தேன். வருவாய் ஆவணங்கள் யார் பெயரிலிருந்தது என்றால் என் மாமனார் பெயரில் இருந்தது. எங்களுடைய TS எண் என்ன என்றால் 1032/3. எஸ்பிஜி மிசன் எதற்கு தரப்பினராக சேர்த்தேன் என்றால் செட்டில்மெண்ட் தாசில்தார் உத்தரவை வைத்து கூட்டு பட்டா வாங்கினோம் அதில் எஸ்பிஜி மிசன் பெயரையும் சேர்த்து கூட்டுபட்டா ஏற்பட்டுள்ளது அதனால் RDOவிடம் தனிபட்டாவுக்கு மனு செய்தேன், அவர் கொடுக்காததால் DROவிடம் மேல்முறையீடு செய்தேன், அவர் உரிமையியல் நீதிமன்றத்திற்கு போகசொன்னதால் இந்த வழக்கு தாக்கல் செய்தேன். எஸ்பிஜி மிசின் சர்ச் தாவா சொத்து அருகில் உள்ளதா என்றால் ஆமாம். அந்த சர்ச்சை சுற்றி கிறிஸ்துவர்கள் உள்ளார் என்றால் ஆமாம். 700 முதல் 800 வீடுகள் அங்கு உள்ளது என்றால் தெரியவில்லை.எஸ்பிஜி மிசன் ஏன் வருவாய் கணக்கில் வந்தது என்று வட்டாட்சியரை கேட்டேனா என்றால் கேட்டேன் 1963இல் Estate Abalition Act 1948ன் படி மிசனுக்கு பட்டா கொடுத்தாக சொல்லியுள்ளார். எஸ்டேட் சட்டப்படி நான் மேல்முறையீடு செய்தேனா என்றால் நாங்கள் அதை செய்யவில்லை. சேவப்பநாயக்கரால் இனாமாக கொடுக்கபட்ட இடம் 1, 2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் தவறு. 1887 சேவப்பநாயக்கர் சர்ச்க்கு கிறிஸ்தவர்கள் ஆராதனை செய்வதற்காக கொடுத்திருக்கிறார் என்றால் தவறு. மாவட்ட வருவாய் அலுவலருக்கு புதிதாக தனிபட்டா கொடுக்க அதிகாரம் இல்லை என்றும் ஏற்கனவே கொடுக்கபட்ட செட்டில்மெண்ட் பட்டாபடி தொடர்

நடவடிக்கைதான் எடுக்கமுடியும் என்றால் தவறு. 1930க்கு முன்பாக அங்கு கிறிஸ்துவர்கள் வாழ்ந்தார்கள் என்றும் அவர்களுக்கு அடிமனை சொந்தம் இல்லை என்றும் மேல்கூரைதான் சொந்தம் என்றும் அவர்கள் அடிமனையை விற்க அதிகாரம் இல்லாதவர்கள் என்றும் சொன்னால் தவறு. வா.சா.ஆ.6,7,8 ஆவணங்கள் வருவாய் கோட்டாட்சியரின் தற்போதைய நடவடிக்கைகள் என்றும் அது 1, 2 பிரதிவாதிகளை கட்டுபடுத்தாது என்றும் சொன்னால் சரியல்ல. சர்ச் எங்களுக்கு அடிமனையை எங்களுக்கு எழுதி கொடுக்கவில்லை என்றும் அதனால் எங்களுக்கு தாவா சொத்தில் உரிமையில்லை என்றும் சொன்னால் சரியல்ல. உரிமையியல் நீதிமன்றங்களுக்கு பட்டா சம்மந்தபட்ட வழக்கில் அதிகாரமில்லை என்று சொன்னால் சரியல்ல. அடியிடம் சொந்தமா, மேல்மனை சொந்தமா என்று வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும் பின்னிட்டு வழக்கு தாக்கல் செய்து கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை வாங்குவதற்கு முன்பாக என்னுடைய முன்னோர்கள் சரியாக பரிசீலனை செய்து வாங்கவில்லை என்றும் அதனால் நான் கோரும் பரிகாரம் கிடைக்காது என்றும் சொன்னால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. சேவப்பநாயக்கரால் கொடுக்கபட்ட இடங்கள் சர்ச்சில் பெறபட்டு அவைகளுக்கு சர்ச்பெயருக்கு செட்டில்மெண்ட் அதார்ட்டியால் பட்டா கொடுக்கபட்டது என்றால் இல்லை.

3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை ஆணையிட்ட பிரமாணவாக்குமூலம் நகல் கொடுக்கவும் உத்தரவிடப்படுகிறது.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.02.17 16:00:24 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**